**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.30/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | திருஞானம் | Prosecution | LW-6 as PW6 |
| Father Name | செல்லகண்ணு | Defence | |
| Village | வெட்டத்தாங்கரை | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 57/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>19.08.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் வருடம் நினைவில் இல்லை ஒரு நாள் நான் ஆச்சாள்புரத்தில் இருந்து வெட்டத்தாங்கரை எனது வயலுக்கு வந்தபோது நானும் சின்னப்பிள்ளை மகன் இளங்கோவன் என்பரும் எனது வயலுக்கு செல்லும் ரோட்டில் நின்று கொண்டிருந்த போது புதுப்பட்டினம் போலிசார் எங்களிடம் கண்ணாயிரம் வீடு எது என்று கேட்டு சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பம் **அசாஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன எழுதபட்டிருந்தது என்பது தெரியுமா என்றால் தெரியாது. என் முன்பு போலிசார் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு போலிசார் என்னை விசாரிக்க வில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**